புதுவை அரசு

வேளாண் துறை

## செய்தி குறிப்பு

புதுச்சேரி பிராந்திய பகுதியில் 'தானே புயல்' மற்றும் பெருமழையின் விளைவாக, வேளாண் பெருமக்களின் நிலங்களில் உள்ள மரங்கள் வேரோடு சாயப்பெற்று பாழ் ஏற்பட்டுள்ளது. அவற்றை அகற்றி, நிலத்தினை சீர் செய்திட உதவும் நோக்கில் வேளாண்துறை டிராக்டர் டோசர், டிராக்டர் மற்றும் டிரெய்லர்களை விவசாயிகளுக்கு அளித்து உதவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய இயந்திரங்களை உபயோகப்படுத்த விரும்பும் விவசாயிகள் வில்லியனூர் உழவர் உதவியகத்தில் வைக்கப்பட்டுள்ள டிராக்டர் டோசர் இயந்திரங்கள் மற்றும் பிற உழவர் உதவியகங்களில் உள்ள டிராக்டர் மற்றும் டிரெய்லர்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகிறது. இந்த இயந்திரங்களை பயன்படுத்திக்கொள்ள வாடகை மற்றும் டீசல் கட்டணம் எதுவும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாது.

இயக்குநர்
வேளாண்துறை